M.VENKATESAN M.A., M.PHIL., B.ED., PG ASST ( HISTORY ) GHSS AYAPPAKKAM

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

| | |
|---|---|
| 1. இ . 1863 | 11. ஈ . ii, I ,iv, iii |
| 2. ஆ . வேளாண்மை | 12. அ . Iii, iv, I, ii |
| 3. ஈ . தூத்துக்குடி | 13. ஈ . கொற்கை |
| 4. ஈ . எட்டுத்தொகை | 14. ஆ . பிர்தௌஸி |
| 5. ஆ . புராணன் | 15. ஆ . இஸ்லாமிய ஞானி |
| 6. ஆ . இண்டிகா | 16. இ . ¼ |
| 7. ஈ . இளஞ்சேட் சென்னி | 17. ஈ . இரண்டும் சரி |
| 8. இ . முதலாம் குமாரகுப்தர் | 18. அ . சிந்தியா - கோலாப்பூர் |
| 9. இ . வசுபந்து | 19. ஈ . இராமநாதபுரம் |
| 10. ஈ . இராமபாலர் இராமசரிதத்தை எழுதினார் | 20. ஈ . கூற்று I சரி ஆனால் கூற்று II தவறு |

II. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி வினா எண் 30 க்கு கட்டாயம் விடையளி.

21. . ஹோமினின் குறித்து சிறு குறிப்பு வரைக

- தற்கால மனிதனுக்கு நெருக்கமான தோற்றத்தை கொண்ட மனித மூதாதையர் ஹோமினின்.
- ஆப்பிரிக்காவில் இவர்கள் வாழ்ந்த அடையாளங்கள் உள்ளன.
- இந்தியாவில் ஹத்னோராவில் ஹோமினின் புதை படிவம் கண்டுபிடிக்கப்பட்டது.

22. வேதகால இலக்கியங்களை வரிசைப்படுத்துக

- ரிக், யஜுர், சாம, அதர்வண ஆகியன வேதகால இலக்கியமாகும்.
- இவற்றில் பழமையானது ரிக் வேதம் ஆகும்.
- வேதங்களுக்கு விளக்கவுரையாக பிரமாணங்கள் இயற்றப்பட்டன.

23. எதன் காரணமாக அலெக்சாண்டர் பேரரசின் அரியணையை திருப்பி தந்தார் ?

- ஹைடாஸ்பஸ் போரில் தோல்வியடைந்த போரஸ் சிறை பிடிக்கப்பட்டார்
- பேரரசின் கண்ணியத்தால் அலெக்சாண்டர் ஈர்க்கப்பட்டார்
- எனவே தனது மேலாண்மையை ஏற்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் அவரது அரியணையை திருப்பித் தந்தார்.

24. பால வம்ச ஆட்சியின் போது நாளந்தா பல்கலைக் கழகத்தின் முக்கியத்துவம்

- பௌத்த மதக் கொள்கையை போதிக்கும் முக்கிய மையமாக விளங்கியது.
- இந்தியாவின் கிழக்குப் பகுதியில் பௌத்த மதம் புகழ்பெற உதவியது.
- பௌத்த , சமண, சமஸ்கிருத இலக்கியங்கள் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியது.

25. இஸ்லாமிய இசைஞர்கள் அறிமுகப்படுத்திய இசைக்கருவிகள்

- ரபாப், சாரங்கி

அமீர்குஸ்ருவின் இலக்கியப் படைப்புகள் யாவை

- ஒன்பது வானங்கள், துக்ளக் நாமா, காஸெய்ன் -உல் - ஃபுரு, குஸ்ஸா சாஹர் தர்வேஷ், தேவான் குர்ராட்-உல்-காமால், Baqia- மிஸ்கெல்லணி, தாரிக் -i- அலாய் , எஜாஸ்-இ-குஸ்ரோவி.

26. விஜயநகர அரசு யாரால் ஏற்படுத்தப்பட்டது ? எதனால் அப்பெயர் வந்தது ?

- ஹரிஹரர், புக்கர் என்ற சகோதரர்கள் விஜய நகர அரசை நிறுவினர்.
- இதன் தலைநகரம் அனகொன்டி என்ற இடத்திலிருந்து ஹொசபட்னாவிற்கு மாற்றப்பட்டது.
- பின்னர் வெற்றியின் நகரம் என்ற பொருளில் விஜய நகரம் என பெயர் சூட்டப்பட்டது.

27. நாயக்க அரசுகள் யாவை ? அவை நிறுவப்பட காரணம் என்ன ?

- விஜயநகர ஆட்சியின் போது தமிழகப் பகுதிகளில் நாயக்க அரசுகள் நிறுவப்பட்டன.
- மதுரை, தஞ்சாவூர், செஞ்சி ஆகியன நாயக்க அரசுகளாகும்.
- மைய அரசுக்கு தேவைப்படும் நிதி ஆதாரங்களையும், மனித ஆற்றலையும் திரட்டி கொடுப்பதே இதன் நோக்கம் ஆகும்.

28. வராகன் (பகோடா) என்றால் என்ன ?

- விஜய நகரத்தில் அறிமுகமான தங்க நாணயம் வராகன் எனப்பட்டது.
- ஐரோப்பிய வணிகர்கள் இந்தியாவிற்கு வந்த காலக் கட்டத்தில் இப்பணம் செல்வாக்கு பெற்று விளங்கியது.
- திப்பு சுல்தான் ஆட்சியில் மைசூரில் ஒரு பகோடா (வராகன்) மூன்றரை ரூபாய்க்கு சமமாக கருதப்பட்டது.

29. யூசுப் கான் சிறு குறிப்பு வரைக.

- ஆற்காடு நவாபின் படைத்தளபதி ஆவார்.
- புலித்தேவரை அடக்குவதற்கு நவாபால் அனுப்பப்பட்டார்.
- புலித்தேவருக்கு சொந்தமான பல இடங்களை கைப்பற்றினார்.
- நவாபால் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு தூக்கிலிடப்பட்டார்.

30. பண்டித ரமாபாய் குறிப்பு வரைக.

- பெண் விடுதலைக்காக போராடிய முன்னணி தலைவர்களில் ஒருவர் ஆவார்.
- சமஸ்கிருத மொழியில் ஆழமான புலமை கொண்டிருந்தார்.
- பெண்கல்விக்காக ஆரிய மகிளா சமாஜ் எனும் அமைப்பை நிறுவினார்.
- கைவிடப்பட்ட விதைவைகளுக்காக சாரதா சதன் எனும் அமைப்பை நிறுவினார்.
- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக முக்தி சதன் எனும் அமைப்பை நிறுவினார்.

III. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி வினா எண் 40 க்கு கட்டாயம் விடையளி.

31. ஹரப்பா மக்களின் நம்பிக்கைகள்

- சிந்து மக்கள் இயற்கையை வழிபட்டார்கள்.
- அரச மரங்கள் வழிபாட்டுக்குறியதாக இருந்திருக்கலாம் என கருதப்படுகிறது.
- தாய் தெய்வத்தைப் போன்று சுடுமண் உருவங்கள் கிடைத்துள்ளன.
- இறந்தோரை புதைத்ததற்கும், எரித்ததற்கும் சான்றுகள் கிடைத்துள்ளன.

32. தொடக்கக்கால வேதகாலத்தின் புவியியல் பரவல்கள்.

- இந்திய துணைக் கண்டத்தில், தொடக்க வேதகால ஆரியர்கள் கிழக்கு ஆப்கானிஸ்தான்,பாகிஸ்தான், பஞ்சாப், மேற்கு உத்திரப் பிரதேசத்தின் சில பகுதிகளில் வாழ்ந்தனர்.
- இக்காலக் கட்டத்தில் ஆரியர்கள் பெரும்பாலும் சிந்து பகுதிகளிலேயே வாழ்ந்து வந்தனர்.

33. அசோகர் கலிங்கம் மீது படையெடுத்தது பற்றி நாம் அறிவது

- அசோகர் ஆட்சிக் காலத்தின் எட்டாவது ஆண்டில் கலிங்கப்போர் நடைபெற்றது.
- மௌரியர்கள் அதிகாரப்பூர்வமாக பதிவ செய்த படையெடுப்பு ஆகும்.
- போரில் கொல்லப்பட்டவர்கள், படுகாயமடைந்தவர்கள் எண்ணிக்கை பல பத்தாயிரங்களாகும்.
- போரின் துன்பங்களால் நெகிழ்ந்த அசோகர் பௌத்த மதத்திற்கு மாறினார்.

34. மினாண்டர் குறித்து நீங்கள் அறிவது

- இந்தோ கிரேக்க அரசர்களில் மினாண்டர் நன்கறியப்பட்டவர் ஆவார்.
- பாஞ்சாலம், மதுரா அரசர்களோடு சேர்ந்து கங்கை பகுதியை சூறையாடினார்.
- பாடாலிபுத்திரத்தை அவர் வெற்றிகரமாக தாக்கினார்.
- நாகசேனருடன் பௌத்தம் குறித்து விவாதத்தில் ஈடுபட்ட அவர் பௌத்தமதத்திற்கு மாறினார்.

35. எல்லோரா மற்றும் எலி ஃபெண்டாவின் நினைவுச் சின்னங்கள்

- எல்லோரா குடை வரைகோவில் வளாகம் பௌத்த, சமண, இந்து மத சின்னங்களுக்கான கலை நுட்பத்தைக் கொண்டுள்ளது.
- ஒரே கல்லால் செதுக்கப்பட்ட எல்லோரா கைலாசநாதர்கோவில் சிறப்பு வாய்ந்ததாக உள்ளது.
- எலிஃபண்டாவின் பிரதான கோவில் எல்லோரா கோவிலை விட சிறந்ததாகும்.
- எலிஃபண்டாவின் நடராஜர், சதாசிவம் ஆகிய சிற்பங்கள் அழகிலும், கலை நுட்பத்திலும் சிறப்பானவையாக உள்ளன.

**36.** குதுப்மினார் சிறு குறிப்பு வரைக.

- குத்புதீன் ஐபெக்கால் கட்ட தொடங்கப்பட்டது.
- இல்துத்மிஷால் கட்டி முடிக்கப்பட்டது.
- பெரோஸ் ஷா துக்ளக் இதனை பழுது பார்த்தார்.
- இதனால் 72.5 மீட்டராக இருந்த இதன் உயரம் 74 மீட்டராக அதிகரித்தது

**37.** இரண்டாம் அலெக்சாண்டர் என்று அழைக்கப்பட்டவர் யார் ? ஏன் ?

- அலாவுதீன் ஹசன்பாமன்ஷா இரண்டாம் அலெக்சாண்டர் என்று அழைக்கப்பட்டார்.
- வாராங்கல், இராஜமுந்திரி, கொண்டவீடு போன்ற அரசுகளை வெற்றிகொண்டார்.
- மேற்கண்ட அரசுகளிடமிருந்து அவர் ஆண்டுதோறும் கப்பம் பெற்றார்.
- தன்னுடைய வெற்றிகளை நினைவு கூறும் வகையில் தன் நாணயங்களில் இரண்டாம் அலெக்சாண்டர் என பொறித்துக் கொண்டார்.

38. அக்பரது மன்சப்தாரி முறை

- பிரபுக்கள், குடிமைப் பணி மற்றும் இராணுவ அதிகாரிகள் ஒன்றுபடுத்தப்பட்டு அவர்களுக்கு மன்சப்தார் பட்டம் வழங்கப்பட்டது.
- மன்சப்தார் தகுதி, ஜாட், சவார் என இருவகைப்பட்டது.
- ஜாட் என்பது ஒவ்வொரு மன்சப்தாரரும் பெறும் இராணுவ வீரர்களின் எண்ணிக்கையாகும்.
- சவார் என்பது மன்சப்தாரரின் கீழிருக்கும் குதிரைகளின் எண்ணிக்கையை குறிக்கும்.

39. பழவேற்காடு

- டச்சுக்கள் பழவேற்காட்டில் ஜெஸ்டிரியா எனும் பாதுகாப்பு கோட்டையை கட்டினர்.
- டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியின் சோழ மண்டல பகுதியில் தலைமையிடமாயிற்று
- மேலை நாடுகளுக்கு இங்கிருந்து வைரம், ஜாதிக்காய், கிராம்பு ஆகியன ஏற்றுமதி செய்யப்பட்டன.
- கிழக்குப் பகுதிகளை கட்டுப்படுத்த இங்கு வெடிமருந்துக் கிடங்குகளை டச்சுக்கள் நிறுவினர்.

40. **1806 ஆம் ஆண்டு வேலூர் புரட்சி பற்றி எழுதுக ?**

- துணை ஜெனரல் அக்கினியு சிப்பாய்களுக்கு அறிமுகப்படுத்திய புதிய தலைப்பாகை வேலூர் புரட்சிக்கு உடனடி காரணமாக அமைந்தது.
- வேலூர் புரட்சியில் முக்கியப் பங்கு வகித்ததாக கருதப்படுபவர் திப்புவின் குடும்பத்திலுள்ள இளவரசர்களில் ஒருவரான ஜமாலுதீன் ஆவார்.
- வேலூர் புரட்சி தொடங்கியதும் மேஜர் கோட்ஸ் கர்னல் ஜில்லெஸ்பிக்கு தகவல் அனுப்பினார்.
- கர்னல் ஜில்லெஸ்பி உடனடியாக ஆற்காட்டிலிருந்து வேலூர் கோட்டைக்கு வந்து புரட்சியை கடுமையாக ஒடுக்கினார்.

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

41. அ திட்டமிடப் பட்ட நகரங்களான ஹரப்பா, மொகஞ்சதாரோ பற்றி எழுதுக ?

*ஹரப்பா*

- அரண்களால் பாதுகாக்கப்படும் தன்மை, நன்கு திட்டமிடப்பட்ட தெருக்கள் கழிவு நீர் வசதி ஆகியன குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.
- ஹரப்பா மக்கள் கட்டுமானத்திற்கு சுட்ட மற்றும் சுடாத செங்கற்களையும், கற்களையும் பயன்படுத்தினார்.
- நகரங்கள் சட்ட வடிவமைப்பை கொண்டிருந்தன, வீடுகள் ஒன்றுக்கு மேற்பட்ட தளங்களை கொண்டிருந்தன.
- வீடுகள் சுடாத செங்கற்களாலும் கழிவு நீர் வசதிகள் சுட்ட செங்கற்களாலும் கட்டப்பட்டன.

*மொகஞ்சதாரோ*

- மொகஞ்சதாரோ ஓர் உயர்ந்த மேடை மீது நன்கு திட்டமிட்டுக் கட்டப்பட்ட நகரமாகும்.
- கோட்டைப் பகுதி, தாழ்வான பகுதி என இரு வேறுபட்ட பகுதிகளாக இரு காணப்பட்டது.
- வீடுகளில் சுட்ட செங்கற்களால் தளம் அமைக்கப்பட்ட குளியலறையும் சரியான கழிவுநீர் வடிகாலும் இருந்தன.
- மொகஞ்சதாரோவில் ஒரு கட்டிடம் சேமிப்புக் கிடங்காக அடையாளம் காணப்படுகிறது.

**41.** ஆ புத்தரின் எண் வழிப்பாதையை விவரி (மத்திம வழி (அ) அஷ்டாங்க மார்க்கம்)

- **1.** நன்னம்பிக்கை **2.** நல்லார்வம் **3.** நல்வாய்மை **4.** நற்செயல் **5.** நல்வாழ்க்கை முறை **6.** நன் முயற்சி **7.** நற்சிந்தனை **8.** நல்ல தியானம்
- புத்தர் கடவுள் பற்றி குறிப்பிடவோ, பேசவோ இல்லை.
- புத்தர் கடவுள் இருப்பை ஏற்கவும் இல்லை மறுக்கவும் இல்லை.
- பௌத்தம் சாதி முறையை ஏற்கவில்லை, சமத்துவத்தை வலியுறுத்தியது.
- அஹிம்சையை பொருத்தவரை மிதமான போக்கை கடைபிடித்தது.
- வணிகத்தையும், சிக்கனத்தையும் ஆதரித்தது.
- ஆயுதங்கள், இறைச்சி , மது, விஷம் ஆகியவற்றை விற்பனை செய்வதை அது அனுமதிக்கவில்லை.

**42.** அ களப்பிரர்கள் என்போர் யார் ? அவர்கள் குறித்து பூலாங்குறிச்சி கல்வெட்டிலிருந்து அறிந்து கொள்வது என்ன ?

- சங்க காலத்திற்கும், பல்லவர், பாண்டியர் காலத்திற்கும் இடைப்பட்ட காலமே தமிழக வரலாற்றில் களப்பிரர் காலம் எனப்படுகிறது.
- களப்பிரர்கள் போர் குணம் மிக்கவர்கள் ஆவர். இவர்கள் தமிழகத்தின் மூவேந்தர்களையும் வீழ்த்தி தமிழகத்தை கைப்பற்றினர்.
- தமிழக வரலாற்றில் இக்காலக் கட்டம் இடைக்கால ஆட்சி என்றும், இருண்டக்காலம் என்றும் சித்தரிக்கப்பட்டது.
- தமிழ் இலக்கியங்களான திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவை இக்காலக் கட்டத்தில் இயற்றப்பட்டவையே.
- அவைதீக மதங்களான சமணமும், பௌத்தமும் களப்பிரர்கள் ஆட்சியில் செல்வாக்கு பெற்றன.
- சிவகங்கை மாவட்டம் பூலாங்குறிச்சியில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு பெ.ஆ ஐந்தாம் நூற்றாண்டை சேர்ந்த சேந்தன், கூற்றன் என்ற இரு அரசர்களைப் பற்றி குறிப்பிடுகிறது.
- இந்த அரசர்கள் பற்றி எந்த குறிப்பும் இல்லாததால் இவர்கள் களப்பிர அரசர்களாக இருக்கலாம் என கருதப்படுகிறது.
- பொ. ஆ. ஆறாம் நூற்றாண்டின் 3 வது கால் பகுதியில் பாண்டியர்களால் களப்பிரர் ஆட்சி முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

**42.** ஆ குப்தர் காலத்து வணிக குழுக்களின் பங்கை ஆய்வு செய்க ?

- குப்தர் பொருளாதாரத்தின் வலிமைக்கு வணிகர்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும்.
- ஒரே இடத்தில் தங்கி வணிகம் செய்து செல்வம் சேர்த்த வணிகர்கள் சிரேஷ்டி எனப்பட்டார்.
- இலாபத்திற்காக ஊர் ஊராக சென்று வாணிபம் செய்தவர் சார்த்தவஹர் எனப்பட்டார்.
- பொருள்களின் உற்பத்தி, அதிகரிப்பு, வணிக விரிவாக்கம் ஆகியவற்றில் வணிக குழுக்களின் பங்கு சிறப்பாக இருந்தது.
- வணிக குழுக்களில் கைவினைஞர்களுக்கான குழுக்கள், வங்கியாளர்களுக்கான குழுக்கள், வணிகர்களுக்கான குழுக்கள் ஆகியோரின் உறுப்பினர்களை கொண்ட குழும அமைப்புகள் இயங்கின.
- பயணிகளின் நலன்களுக்காக நிழற்குடை, சத்திரங்கள், விடுதிகள், கோயில்கள், தோட்டங்கள், மண்டபங்கள் போன்றவற்றை வணிக குழுக்கள் ஏற்படுத்தி தந்தன.
- வணிக குழுக்கள் வங்கிகளின் பங்கினை ஆற்றியதாக கல்வெட்டுகள் மூலம் அறியடுடிகிறது.
- நாரதஸ்மிருதி, பிருகஸ்பதி ஸ்மிருதி ஆகியவை வணிக குழுக்களின் அமைப்பு, செயல்பாடு குறித்து விவரிக்கின்றன.

**43.** அ மாமல்லபுரம் கடற்கரைக் கோயில்களின் கட்டடக்கலை மேன்மைகள் ?

- மாமல்லபுரம் கடற்கரைக் கோவில்கள் ராஜசிம்மன் ஆட்சிக் காலத்தில் எழுப்பியதாகும்.
- இக்கோவில் மூன்று கருவறைகளைக் கொண்டது. இவற்றுள் சிவன், விஷ்னு கடவுள்களின் கருவறை முக்கியமானதாகும்.
- விஷ்னுவின் கருவறையின் வெளிப்பக்கச் சுவரும், சுற்றுச் சுவரின் வெளிப்பக்கமும் விரிவான சிற்பங்களை கொண்டுள்ளது.
- ஒரே கல்லில் செதுக்கப்பட்ட விமானங்கள் மாமல்லபுர கோவில்களின் சிறப்பு பண்பாகும்
- இங்குள்ள ஒற்றைக் கல் ரதங்கள் பஞ்சபாண்டவர் ரதம் என அறியப்படுகின்றன.
- பஞ்சபாண்டவர் ரதங்களில் மிக நேர்த்தியானது தர்மராஜா ரதமாகும்.
- பீம ரதம் செவ்வக வடிவ அடித்தளத்தைக் கொண்டுள்ளது.
- மாமல்லபுரத்தில் செதுக்கப்பட்டுள்ள கலை வெளிப்பட்டில் மிக முக்கியமானது கங்கை நதி ஆகாயத்திலிருந்து இறங்கி வரும் காட்சியாகும்.

**43. ஆ பாசனத்தை மேம்படுத்த பாண்டியர் எடுத்த நடவடிக்கைகள் என்ன ?**

- திருமால் ஏரி, மாறன் ஏரி, கலியன் ஏரி, காடன் ஏரி என்ற பெயர்களில் புதிய ஏரிகள் வெட்டப்பட்டன.
- வைகை, தாமிரபரணி ஆகிய ஆறுகளின் இரு கரைகளிலும் கால்வாய்கள் வெட்டப்பட்டு பாசன குளங்களுக்கு நீர் கொண்டு செல்லப்பட்டது.
- சேந்தன் மாறன் காலக்கட்டத்தில் வைகை ஆற்றில் ஒரு மதகு கட்டப்பட்டது.
- ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் வெட்டிய ஒரு பெரிய ஏரி இன்றும் பயன்பாட்டில் உள்ளது.
- ஏரிகளின் கரைகளை அமைக்கும் போது கரை மட்டத்தை சமமாக பராமரிக்க நூல் பயன்படுத்தினர்.
- கரைகளின் உட்பகுதியை வலுவூட்ட கல் அடுக்குகளை பயன்படுத்தினர்.
- பாசன நீர் நிலைகளின் பராமரிப்பு பணிகள் பெரும்பாலும் உள்ளாட்சி அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்டன.
- வணிகர்களும் சில சமயங்களில் பாசன ஏரிகளை வெட்டினர்.

**44. அ பக்தி இயக்கத்தின் சிறப்பியல்புகளை வரிசைப்படுத்துக.**

- பக்தி இயக்கச் சீர்த்திருத்தவாதிகள் ஒரு கடவுள் கொள்கையைப் போதித்தனர்.
- இறைவனுடைய அருளைப் பெற அர்ப்பணிப்பை வற்புறுத்தினர்.
- குருவானவர் வழிகாட்டியாகவும் ஆசிரியராகவும் இருத்தல் வேண்டும் என்றனர்.
- உலக சகோதரத்துவம் எனும் கொள்கையைப் போதித்தனர்.
- உருவ வழிபாட்டைவிமர்சனம் செய்தனர்.
- ஆழ்ந்த பக்தியுடன் பாடல்கள் பாடவேண்டுமென வலியுறுத்தினர்.
- சடங்குக ள் , சம்பிர தாயங்கள் , புனித யாத்திரைகள், விருந்துகள், சாதிமுறைஆகியவற்றைக் கண்டனம் செய்தனர்.

**44. ஆ "வருவாய் நிர்வாகத்தில் ஷெர்ஷா அக்பரது முன்னோடி" - விளக்குக.**

- நெகிழ்வுத் தன்மை கொண்ட வருவாய் முறையைப் பின்பற்றினார்.
- நிலங்கள் முறையாக அளவை செய்யப்பட்டு நிலங்களின் வளத்திற்கு ஏற்றவாறு வரி நிர்ணயம் செய்யப்பட்டது.
- சில பகுதிகளில் ஜாகீர்தாரி முறையும் ஜமீன்தாரி முறையும் தொடர்ந்து செயல்படுவதற்கு அனுமதிக்கப்பட்டன.
- வணிகத்தை ஊக்குவிப்பதற்காக வணிக வரிகளை எளிமைப்படுத்தினார்.
- நுழைவு வரி, விற்பனைவரி ஆகியவை மட்டுமே வசூலிக்கப்பட்டன.
- தங்க, வெள்ளி, செப்புக்காசுகளில் இடம் பெறும் உலோகங்களின் தர அளவு வரையறை செய்யப்பட்டது.
- அவருடைய நாணய முறையானது முகலாயர் காலம் முழுவதும் அப்படியே பின்பற்றப்பட்டு ஆங்கிலேயர் காலத்து நாணய முறைக்கும் அடித்தளமானது.

**45. அ குஷானர் காலத்தில் கலையும் இலக்கியமும் எவ்வாறு வளர்ச்சி பெற்றன என்பதை விளக்கவும்.**

- மகாயன பௌத்தம் தோன்றியதன் விளைவாக புத்த மதத்திலும் சிலை வடிப்பது அனுமதிக்கப்பட்டது. இது காந்தாரக் கலைக்கு வித்திட்டது.
- இந்தோ கிரேக்க பாணியில் சிற்பங்களும், கலையும் தோன்றுவதற்கு இது வழிவகுத்தது.
- தட்சசீலத்திலும், வடமேற்கு பகுதிகளிலும் செதுக்கப்பட்ட புத்தரின் சிலைகள் கிரேக்க மரபால் ஊக்கம் பெற்று கண்ணியமான ஆடைகளில் அவரை காட்டுகின்றன.
- அஜந்தா குகைகள் முதல் மும்பையில் கன்ஹேரி குகைகள் வரை பௌத்தர்கள் பாறைகளை குடைந்து சைத்தியங்களையும், விகாரங்களையும் அமைத்தனர்.
- மகாயான மரபின் ஒரு பகுதியாக இந்த குகைகளில் புத்தரின் பெரிய அளவு சிலைகள் வடிக்கப்பட்டன.
- நாகார்ஜுனர், அஸ்வகோஷர், பார்ஸவர், வசுமித்திரர் போன்றோரை கனிஷ்பர் ஆதரித்தார்.
- அஸ்வகோஷர் புத்தசரிதம் எனும் நூலையும் சரிபுத்ரப்ரகரண எனும் சமஸ்கிருத நாடகத்தையும் இயற்றினார்.
- இந்து மத நூல்களான மனுஸ்மிருதி, வாத்சயாயனரின் காமசூத்திரம், அர்த்தசாஸ்திரம் ஆகியன இக்காலக் கட்டத்தில்தான் இறுதி வடிவம் பெற்றன.

45. ஆ ஆங்கிலேயருக்கு எதிரான போராட்டத்தில் வீரபாண்டிய கட்டபொம்மனின் பங்கை விரிவாக எழுதவும்.

- கிஸ்தி செலுத்துவது தொடர்பாக கட்டபொம்மனுக்கும் ஆங்கில கம்பெனிக்கும் இடையே சச்சரவு ஏற்பட்டது.
- புதிதாக ராமநாதபுர கலெக்டராக பொறுப்பேற்ற ஜாக்சன் கட்டபொம்மனிடம் கடுமையாக நடந்து கொண்டதால் இருவரிடையே மோதல் வெடித்தது.
- இம்மோதல் தொடர்பாக கட்டபொம்மன் சென்னை அரசாங்கத்துக்கு கடிதம் எழுதியதை தொடர்ந்து ஜாக்சன் பணிநீக்கம் செய்யப்பட்டு லூஷிங்டன் கலெக்டராக பணியமர்த்தப்பட்டார்.
- இருப்பினும் கட்டபொம்மன் தனக்கு ஏற்பட்ட அவமானத்தை மறக்கவில்லை எனவே அவர் மறுத்து சகோதரர்களுடன் இணைந்து ஆங்கிலேயருக்கு எதிரான கூட்டமைப்பை உருவாக்க முயன்றார்.
- சிவகிரி பாளையத்துடன் கட்டபொம்மன் நெருங்கிய உறவு ஏற்படுத்தியதை கம்பெனி தனக்கு விடப்பட்ட சவாலாக கருதியது.
- அதன்படி வெல்லெஸ்லி பிரபு மேஜர் பானர்மேன் தலைமையில் பெரும் படையொன்றை கட்டபொம்மனுக்கு எதிராக அனுப்பினார்.
- பானர்மேன் தன்னை பாளையங்கோட்டையில் வந்து சந்திக்குமாறு இறுதி எச்சரிக்கை விட்டார்.
- அவரது எச்சரிக்கையை கட்டபொம்மன் அலட்சியப்படுத்தியதால் பாஞ்சாலங்குறிச்சியின் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது.
- தொடர்ந்து நடைபெற்ற போரில் பாஞ்சாலங்குறிச்சி கோட்டை வீழ்ச்சியடைந்தது களப்பூர் காட்டில் தஞ்சமடைந்திருந்த கட்டபொம்மனை புதுக்கோட்டை தொண்டைமான் கைது செய்து ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தார்.
- பானர்மேன் கட்டபொம்மன் மீது பெயரளவு விசாரணை மேற்கொண்டு அவரை அக்டோபர் 17, 1799 அன்று தூக்கிலிட்டார்.

46. அ வட இந்தியாவின் நிலை குறித்து யுவான் சுவாங்கின் கருத்துக்கள் ?

- இந்து சமூகத்தில் சாதி அமைப்பு நன்றாக வேரூன்றியிருந்தது என குறிப்பிட்டுள்ளார்
- சாதி அமைப்பு இறுக்கமாக காணப்பட்ட போதிலும் சமுதாயத்தில் மோதல்கள் ஏதும் நிகழவில்லை என பதிவு செய்துள்ளார்.
- பெண்கள் முகத்திரை அணிந்தனர், மேலும் சதி வழக்கமும் நடைமுறையில் இருந்தது.
- மக்கள் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தனர். ஆண், பெண் இருபாலரும் அணிகலன்கள் அணிந்தனர்.
- மரக்கறி உணவுப் பழக்கத்தை மக்கள் பின்பற்றியதாக கூறுகிறார்.
- சர்க்கரை, நெய், பால் , அரிசி போன்றவை அன்றாட வழக்கத்தில் இருந்த உணவுப் பொருள்களாகும்.
- யுவான்சுவாங் கூற்றுப்படி ஹர்ஷப்பேரரசு சீனாவைப் போன்றே எண்ணற்ற கிராமங்களையும், சிறுநகரங்களையும் கொண்டிருந்தது.
- பெரும் சத்திரங்கள், பொது கட்டிடங்கள், பௌத்தமடாலயங்கள் ஆகியன பெரிதாகவும், அடுக்குமாடி கட்டிடங்களாகவும் இருந்தன.

46. ஆ ஆங்கிலேய கிழக்கிந்திய நிறுவனத்தின் கீழ் கல்வி முறை எவ்வாறு வளர்ச்சி பெற்றது?

- வாரன் ஹேஸ்டிங்ஸ் ஒரு மதரசாவை உருவாக்கியதே பிரிட்டிஷார் கல்விக்கு ஆற்றிய முதல் தொண்டு ஆகும்.
- காரன்வாலிஸ் வாரணாசியில் ஒரு சமஸ்கிருதக் கல்லூரியை நிறுவினார்.
- 1813ஆம் ஆண்டு பட்டயச் சட்டத்தில் தெளிவான கல்விக் கொள்கையை உருவாக்க வலியுறுத்தப்பட்டது.
- ஹேஸ்டிங்ஸ் தாய்மொழிக் கல்வியின் வளர்ச்சியை ஊக்குவித்தார்.
- வில்லியம் பெண்டிங் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலம் ஆட்சி மொழியாகவும் பயிற்று மொழியாகவும் அறிவிக்கப்பட்டது .
- கல்கத்தாவில் ஒரு மருத்துவக் கல்லூரியும் பம்பாயில் ஒரு மருத்துவக் கல்லூரியும் நிறுவப்பட்டது.
- சார்லஸ் உட்டின் 'கல்வி அறிக்கை ஆரம்பக்கல்வி முதல் உயர்நிலைப் பள்ளியையும், கல்லூரிப் படிப்பையும் வழங்கியது.
- உட் அறிக்கையின் விளைவாக சென்னை பம்பாய் கல்கத்தா மாகாணங்களில் பல்கலைக் கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

47. அ பிரம்ம சமாஜம் - 1828
தியோபந்த் இயக்கம் - 1866
பிரார்த்தனை சமாஜம் - 1867
சத்ய சோதக் சமாஜம் / சிங் சபா இயக்கம் - - 1873
ஆரிய சமாஜம் / பிரம்மஞானசபை / அலிகார் இயக்கம் - 1875
இராமகிருஷ்ண இயக்கம் - 1893
நட்வத் அல் உலாமா - 1894
அகமதியா இயக்கம் - 1889